# சமுதாய மீளுருவாக்கத்தில் அற இலக்கியங்களின் வகிபங்கு: நாலடியாரை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆய்வு

**திலீபன். தி**
விரிவுரையாளர்
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thileepant@univ.jfn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

வாழ்க்கையின் பல்வேறுபட்ட அம்சங்களை எடுத்துரைப்பதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. சங்கமருவிய காலத்தில் தோற்றம்பெற்ற பதினெண்கீழ்கணக்கு நூல்களில் குறிப்பிடத்தக்க இடம் இந்நூலுக்குண்டு. திருக்குறளைப் போலவே அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப்பொருட்களைத் தெளிவாக இந்நூல் எடுத்துரைக்கின்றது. சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிதிலமடைந்த புராதன இனக்குழுச் சமூகமொன்றின் மீள்கட்டுமானத்தில் சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. தனிநபர் - குடும்பம் - சமுதாயம் எனப் பரிணாம வளர்ச்சியினை அறத்தினை அடிப்படையாகக்கொண்டு கட்டமைக்க இக்கால இலக்கியங்கள் முனைப்புக்காட்டின. வாழ்க்கைக்கு அவசியமான நடத்தைசார் பண்பியல்புகளைப் பல்வேறு வடிவங்களில் அவை வெளிப்படுத்தின. சமுதாய சீர்திருத்தம் கருதிய தன்மையில் தனிநபர் மடைமாற்றச் சிந்தனைகளை இக்கால அற இலக்கியங்கள் பொருண்மையாகக் கொண்டுள்ளன. புராதன இனக்குழுமச் சமுதாய மீள்கட்டுமானத்திற்கு இவ்விலக்கியங்கள் பெருந்துணை புரிந்துள்ளன. இதனைக் கருதுகோளாகக் கொண்டே இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது. இதனடிப்படையில் புராதன இனக்குழுமச் சமுதாயமொன்றின் மீளுருவாக்கச் செயற்பாட்டில் நாலடியார் எனும் இலக்கியத்தின் வகிபங்கு எத்தகையது? என்பதனை ஆய்வின் இலக்காகக்கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது.

திறவுச்சொற்கள்: அற இலக்கியங்கள், நாலடியார், சமுதாய மீளுருவாக்கம், தனிநபர் நடத்தைகள்

## அறிமுகம்

*சங்கமருவிய கால இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைநிலை, அறவியற் சிந்தனைகள், பண்பாட்டு அம்சங்கள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றன. இக்காலத்தில் தோற்றம்பெற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறம், பொருள், இன்பங்களை எடுத்துரைக்கும் நீதி மற்றும் அற இலக்கியங்களாக விளங்குகின்றன. இதனையே "தாய பனுவலோடென்றது, அறம் பொருளின்ப மென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப போன்று வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச்செல்வ தென்றவாறு" என்ற தொல்காப்பிய உரையிலிருந்து அறியலாம் (தொல்காப்பியம், பொருள். சூத், 547). இக்கீழ்க்கணக்கு நூல்கள் எவை என்பது பற்றி பின்வரும் வெண்பா வெளிப்படுத்தி நிற்கின்றது,*

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுக்கங் கோவை பழமொழி – மாமூலம்

இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே

கைந்நிலைய வாங் கீழ்க்கணக்கு"

மேற்படி கீழ்க்கணக்கு நூல்களில் பதினொன்று நீதி நூல்களாகவும் ஏனையவற்றுள் ஆறு நூல்கள் அகம் சார்ந்தவையாகவும் ஒன்று புறம் சார்ந்ததாகவும் விளங்குகின்றன. இந்நூல் களின் இலக்கணத்தைப் பிற்கால இலக்கண நூலார் பின்வருமாறு எடுத்துரைக்கின்றனர்.

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி

அறம் பொருள் இன்பம் அடுக்கியவ் வகைத்

திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்"

அதாவது மிக்க அடிகளைக்கொள்ளாது குறைந்த அடிகளாலாகிய செய்யுட்களின் தொகுதிகளைக்கொண்டு அறம், பொருள், இன்பம் ஆகியவற்றில் ஒன்றையோ பலவற்றையோ வெளிக்கொணர்வதாக இந்நூல்கள் அமைந்திருக்கின்றன.

## அற இலக்கியங்களின் தோற்றமும் சிறப்பும்

சங்கமருவிய காலத்தில் அந்நியர் ஆட்சி நாட்டில் குழப்பம், அமைதியின்மை யினை ஏற்படுத்தியிருந்தது. இதனால் அக்காலப்பகுதி இருளடர்ந்த காலப்பகுதியாகக் காணப்படுவதால் வேண்டும். ஒரு சமுதாயத்தில் போர், குழப்பம், அமைதியின்மை முதலியன தொடர்ந்திருந்தால் அச்சமுதாயத்தின் அமைப்பு சீர்குன்றி ஒழுக்கக்கேடற்று காணப்படுவது இயல்பு. இத்தகைய நிலை சங்கமருவிய காலத்திலிருந்திருக்கிறது என்பது ஆய்வாளர்களின் கருத்து (வேலுப்பிள்ளை, 2011:32). அதுமட்டுமன்றி தமிழ்மொழி, கலை, கலாசாரம், நாகரிகம் என்பனவும் வீழ்ச்சியுற்றிருந்தது. எனவேதான், இக்கால மக்கள் தம் பண்டைய அறவொழுக்கங்களைப் போற்றி அவற்றின் வழியே நல்வாழ்க்கையை நடாத்த அற இலக்கியங்களைப் படைக்கலாயினர். இதன் பின்னணியிலேயேதான் அதிகளவிலான அற இலக்கியங்கள் தோற்றம்பெறலாயின.

இவ்வுலக வாழ்க்கையில் தனிமனிதனும் சமுதாயமும் நலமாக வாழ்வதற்கும் முன்னேற்றத்தை அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாததொன்றாகும். குறிப்பாக அற இலக்கியங்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழரின் மரபாகும். இவ்விலக்கியங்கள் மக்களின் நல்வாழ்விற்கு உதவக்கூடிய ஒழுக்க நெறிகளையும் ஆசாரங்களையும் தெளிவாக எடுத்துரைத்து சமுதாயத்தை மீளுருவாக்கம் செய்திருக்கின்றதோடு இவை எல்லாக் காலத்திற்கும் உலகினர் யாவருக்கும் பொதுவாகப் பொருந்தும் கருத்துக்களைக் கூறியிருக்கின்றன. இதனாலேயேதான் மணிமேகலை போன்ற நூல்கள்,

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள், மன்னுயிர்க்கு எல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டறிதல்" (மணிமேகலை, மணிபல்லவமடைந்த காதை, 228-231). எனத் தெளிவுபடுத்தியிருந்தமை இங்கு அறியத்தக்கதாகும்.

மேலும் அறநூல்கள் மனித குலத்தின் மேன்மைக்கு வழிகாட்டும் மகத்துவமான நூல்களாக விளங்குவதோடு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளையும் எடுத்துரைக்கின்றன.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்…"

"அறத்தான் வருவதே இன்பம்…"

என்ற அடிகள் இதற்குத் தக்கசான்றுகளாக விளங்குகின்றன.

எனவேதான், மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்தி சான்றோர்கள் அறத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி புதியதொரு சமுதாயத்தை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை - போதனைகள் அவசியமாயிற்று. இந்நிலையிலே சங்கமருவிய காலத்தில் நாலடியார் போன்ற அற இலக்கியங்களின் தோற்றமானது விதந்து குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

குறிப்பாக மக்களது நல்வாழ்வுக்கு உறுதியளிப்பனவாக உயர்ந்தோரால் உணர்த்தப்பெற்ற அறம், பொருள், இன்பம் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக வலியுறுத்தி திருக்குறளுக்கு அடுத்தபடியாக சிறப்புற்று விளங்கும் நாலடியார் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றது. இதனாலேயேதான் இன்றும் மக்களால் "பழகு தமிழ் சொல் அருமை நாலு இரண்டு" மற்றும் "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று போற்றப்படுகின்றமை அறியத்தக்கதாகும்.

## நாலடியாரின் சிறப்பு

பொதுவாக அறநூல்கள் மக்களின் வாழ்வியலைச் செம்மைப்படுத்துகின்றன. இந்நிலையில் நாலடியாரின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட விடயங்களை எடுத்துரைத்தலில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது. இதனாலேயேதான் அதன் சிறப்பினைச் சான்றோர்கள் "சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது", "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி", "நாலடி இரண்டடி கற்றவனிடத்து வாயடி கையடி அடிக்காதே" எனப் போற்றியிருந்தனர்.

நாலடியார், நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களாலானதோடு "நாலடி" எனும் சிறப்பு விகுதியுடன் "ஆர்" சேர்ந்து நாலடியார் எனத் தோற்றம்பெறலாயிற்று (சுந்தர சண்முகனார், 1970:4). இந்நூல் சமண முனிவர்களால் பாடப்பட்டது. திருக்குறளைப் போன்றே வைப்புச்செய்யப் பெற்று அதற்கு அடுத்தபடியாக அன்றுதொட்டு இன்றுவரை பலராலும் போற்றப்பட்டு வருகின்றமை அதன் சிறப்பம்சமாகும்.

மேலும் இந்நூல் மனித இனத்தின் மேன்மைக்கு வழிகாட்டும் சிறப்புப் பொருந்தியது. குறிப்பாக அறம், ஆசாரம் பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்ததில் பெருமைக்குரியதாக விளங்குகிறது. "அறம் புரிந்து ஆக்கம் தேடிக்கொள்ளல்" இதன் சிறப்பியல்பாகும். இந்நிலையில் சமூக மீளுருவாக்கத்தில் அற இலக்கியங்கள் குறிப்பாக நாலடியார் போன்ற இலக்கியங்களின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். அதாவது சமுதாய சீர்திருத்தம் கருதிய தன்மையில் தனிநபர் மடைமாற்றச் சிந்தனைகளைப் பொருண்மையாகக்கொண்டு புராதன இனக்குழுமச் சமுதாய மீள்கட்டுமானத்திற்கு இவ்விலக்கியங்கள் பெருந்துணை புரிந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

## சமுதாய மீளுருவாக்கத்தில் நாலடியார்

சங்கமருவிய காலத்தில் அந்நியர் படையெடுப்பு, ஆட்சி மாற்றங்களால் சிதிலமடைந்த புராதன இனக்குழுச் சமூகமொன்றின் மீள்கட்டுமானத்தில் தோன்றிய இலக்கியங்கள் அக்கட்டுமானச் சிந்தனைகளில் தீவிர செல்வாக்குச் செலுத்தியுள்ளன. தனிநபர் - குடும்பம் - சமுதாயம் எனப் பரிணாம வளர்ச்சியினை அறத்தினை அடிப்படையாகக்கொண்டு கட்டமைக்க நாலடியார் போன்ற இலக்கியங்கள் முனைப்புக்காட்டின.

வாழ்க்கைக்கு அவசியமான நடத்தைசார் பண்பியல்புகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தி சமுதாய சீர்திருத்தம் கருதிய தன்மையில் இக்கால அற இலக்கியங்கள் பொருண்மையாகக்கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சமுதாய மீளுருவாக்கத்தில் அறம், ஒழுக்கம் மற்றும் கல்வியற் சிந்தனைகளின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்நிலையில் நாலடியாரில் முதன்மைப் படுத்தப்படும் மேற்குறித்த சிந்தனைகள் காத்திரமானது. ஒழுக்கத்தின் மேன்மை மிகவும் உயர்வாகப் போற்றப்பட்டது. "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்பது வள்ளுவம். எனவே, ஒழுக்கத்தின் மேன்மையுணர்ந்து ஒருவன் பிறருடைய இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும் பிறர் இல்லாதபோது அவரைப் பற்றிப் பழித்துப் பேசுவதில் ஊமையாகவும் இருப்பானால் அவனுக்கு வேறெந்த அறமும் கூறவேண்டியதில்லை. இதனைப் பின்வரும் அடிகள் வலியுறுத்திநிற்கின்றன.

> "பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
> ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய..." (நாலடியார், 158)

மேற்குறித்த சிந்தனைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது, சங்கமருவிய காலம் மட்டுமன்றி தற்போதைய சமூகக் கட்டமைப்பிலும் கூட முரண்பாடுகளும் மோதல்களும் சமூகப் பிறழ்வுகளும் ஏற்படுவதற்கு பிறரின் இரகசியங்களைக் கேட்டல், அதனை ஏனையோருக்குக் கூறல், மற்றவர்களை அவமதித்தல் மற்றும் புறக்கணித்தல் போன்றன காரணங்களாக விளங்குகின்றன. எனவே இத்தகைய நிலைப்பாட்டிலிருந்து மீளுகின்றபோதுதான் சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும். ஆக, அன்று தோற்றம்பெற்ற நாலடியாரின் சிந்தனைகள் எக்காலத்திற்கும் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றமை அதன் சிறப்பியல்பினை எடுத்துக்காட்டுகின்றது.

ஒருவன் உலகத்து நல்லன என்று பலரும் கருதுவனவற்றை விரும்புவதோடு நல்லொழுக்க நெறியிலும் ஒழுக வேண்டும். அத்தோடு பலருக்குப் பயன்படுமாறு சிறந்த அறங்களைச் செய்து மேம்பட வேண்டும். இங்ஙனம் வாழும் வாழ்க்கையே மிகவும் பயனுடையதாக விளங்கும் என்பது பற்றி நாலடியார் பின்வருமாறு வலியுறுத்துகின்றது.

> "உளநாள் சிலவால் உயிர்க்கேமம் இன்றால்
> பலர்மன்னும் தூற்றும் பழியால் - பலருள்ளும்........." (நாலடியார், 324)

மேலும் ஒருவன் செய்யும் அறமே பிறவிப் பயனாய் அவனைத் தொடர்ந்து அவனுக்கு மென்மேலும் ஆக்கத்தையே அளித்துக்கொண்டு செல்லும் என்ற உண்மையைச் சிறந்த உவமையினூடாக நாலடியார் தெளிவுபடுத்துகின்றது.

> "ஆட்பார்த் துழலும் அருள்இல் கூற்றுண்மையால்
> தோள்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின்........." (நாலடியார், 20)

மேற்குறித்த சிந்தனைகளின் வெளிப்பாடுகளே இறப்பு இன்று வருமோ அன்று வருமோ என்று வருமோ என்று நினையாமல் எமன் பின்புறத்திலேயே நிற்கின்றான் என எண்ணித் தீயசெயல்களை விட்டுவிடுங்கள் என நாலடியார் பரிந்துரைக்கின்றது. முடிந்தளவு மாண்புடையோர் போற்றிய அறத்தைச் செய்யுங்கள். குறிப்பாக அறம் புரிந்து வாழ்வோரே உலகில் உண்மை மக்களாய் மாட்சிமையுற்றுத் தோன்றிப் பொலிகின்றனர் என்பதனை,

> "இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
> பின்றையே நின்றது கூற்றமென்றெண்ணி.........." (நாலடியார், 36)

எனவேதான், மேற்குறித்த ஒழுக்கம் மற்றும் அறவியற் சிந்தனைகள் மனிதரை

மையப்படுத்தி அவரது வாழ்க்கைக்கூடாக உலகைச் செம்மைசெய்ய முயற்சித்துள்ளன. அதாவது தனிமனிதர் தம்வாழ்வோடும் சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழும் நிலையில் காலம், இடம், சூழமைவு ஆகியவற்றை அடிப்படை யாகக்கொண்டு அவற்றுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கவும், அல்லாதனவற்றைத் தவிர்க்கவும் வழிகாட்டுவதோடு, உரியனவெனத் தேர்ந்தெடுத்தவற்றைச் சீரான முறையில் செயற்படுத்துவதற்கு வேண்டிய செயலறிவையும் வழங்கியிருக்கின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனாலேயேதான் மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதி இலக்கியங்கள் "விதித்தன செய்தலும் விலக்கின ஒழித்தலுமே அறம்" எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும்.

சமுதாய மீளுருவாக்கத்திலும் மனிதனுடைய வாழ்க்கையில் உயர்வான எண்ணங்கள் எழுச்சிபெறவும் கல்வி அவசியமானது என்பது பற்றி அற இலக்கியங்கள் மிகத் தத்துரூபமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. குறிப்பாக, மனிதராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வி மிகவும் அவசியமானது. அது ஒன்றுதான் மனிதனுடைய பிறப்பிலிருந்து இறப்புவரை கூடவரக்கூடியது. இதனாலேயேதான் கற்றவர்கள் மட்டும் கண்ணுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். இதனையே வள்ளுவர்,

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்" என வலியுறுத்துகின்றார்.

கல்வியின் மகத்துவம் பற்றிக் குறிப்பிடும் நாலடியார், கல்வியானது அறியாமை எனும் நோயை வேரொடு அழித்து இவ்வுலக இன்பத்தைத் தந்து புகழை எங்கும் பரவச்செய்கின்றது. இதன் சிறப்பினை மேலும் தெளிவுபடுத்தும் வள்ளுவர், ஒருவன் கல்வியறிவைத் திறன்படப் பெற்றானேயானால் அக்கல்வியறிவு இப்பிறப்பில் மட்டுமல்லாது ஏழு ஜென்மமும் அவனைத் தொடரும் என வலியுறுத்தியிருக்கின்றார். இதனையே, "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு, எழுமையும் ஏமாப்புடைத்து" எனும் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. ஆக, எந்த உலகத்திலும் கல்வியைப்போல அறியாமைப் போக்கும் மருந்து வேறில்லை எனத் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இதனையே,

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்.........." (நாலடியார், 132)

எனும் அடிகள் சான்றுபகர்கின்றன.

மேலும் சமுதாயத்தை மேம்படுத்தும் ஆற்றலுடையது கல்வி என்பதனையும் அதனால் வரும் அழகு தனித்துவமானது அத்தோடு பிறப்பினால் அடையமுடியாத சிறப்பைக் கல்வியால் அடையலாம் என்பதனையும் நாலடியார் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும் முந்தானையில் கரையிட்ட அழகும் உண்மை அழகல்ல. மனதளவில் உண்மையாக நடந்துகொள்கிறோம் எனும் நடுவுநிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாகும் என்பதனை,

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து..." (நாலடியார். 131)

எனும் வரிகளும் கல்வியே மனித சிறப்பிற்கு அடிப்படை என்பதை,

"கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்..." (நாலடியார். 133) எனும் வரிகள் ஆதாரப்படுத்தி

நிற்கின்றன.

குறித்த சமுதாயம் செம்மையாக எழுச்சிபெற்று மேம்படுவதற்கு நல்லினம் சேர்தல் என்ற பண்பும் இன்றியமையாததொன்றாகும். பொதுவாகச் சேர்கின்ற இனத்தைப் பொறுத்தே ஒருவரின் உயர்வும் தாழ்வும் அமையும். அதாவது அறியாப் பருவத்தில் அடக்கம் இல்லாதவரோடு கூடி நெறியல்லாதன செய்தமையால் நேர்ந்த பாவங்களும் நல்லோரைச் சார்ந்து ஒழுகலால் வெயில் மிகுந்தோறும் புல்லின்மேல் படிந்த பனிநீர் அதனைவிட்டு நீங்குதல் போலக்கெடும் எனக் குறிப்பிடுகின்றது. இதனைப் பின்வரும் அடிகள் தெளிவுறுத்துகின்றன,

"அறியாப் பருவத்து அடங்காரோடு ஒன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும் - நெறியறிந்த..." (நாலடியார், 171)

"அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்..." (நாலடியார், 172)

மிகவும் ஆராய்ந்து பார்த்தால் பிறப்பு துன்பம் தருவது எனினும் நற்குணங்கள் நிறைந்த நல்லோருடன் சேர்ந்து அவர் தம் நற்குணங்களைப்பெற்று எல்லா நாளும் அவர்களுடன் நட்புக் கொள்வாராயின் அப்போது யாரும் இந்தப் பிறப்பினை வெறுக்கமாட்டார்கள். இதனையே,

இறப்ப நினையுங்கால் இன்னாது எனினும்
பிறப்பினை யாரும் முனியார் - பிறப்பினுள்..." (நாலடியார், 174) எனும் வரிகள் குறிப்பிடுகின்றன.

மேற்குறித்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது நாலடியாரில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்தியல்கள் குறித்த சமூகத்தின் மீளுருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன என்பது புலனாகின்றது. குறிப்பாக மனிதர்கள் தாம் சார்ந்த சமூகத்தில் தத்தமது வாழ்க்கையினை எவ்வகையில் நெறிப்படுத்தி வாழவேண்டும் என்பது குறித்தும் நெறிப்பட்ட வாழ்வில் எவ்வகையில் மகிழ்வையும் நிறைவையும் தக்கவைத்துக்கொண்டு வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதனையும் நாலடியார் போன்ற அற இலக்கியங்கள் தெளிவாக விளக்கியிருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## முடிவுரை

வாழ்க்கையில் ஓர் ஒழுங்கான அறம் - நீதியை நிலைநாட்டி குறித்த சமூகம் எப்படியெல்லாம் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற அறிவுரைகளை மற்றும் ஆசாரக் கருத்துக்களை தொகுத்து வழங்கி அதனூடு சமுதாயத்தை மீளுருவாக்கம் செய்ததில் நாலடியாரின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். வாழ்க்கை நெறிக்குத் தேவைப்படுவது நல்ல பழக்கவழக்கங்களும் நல்ல சிந்தனையுமாகும். இப்பழக்கவழக்கங்களும் நற்சிந்தனையும் சேர்ந்தே ஒரு மனிதனுடைய நடத்தையை, ஒழுக்கத்தை உருவாக்குகின்றன. எனவேதான், இக்கால மக்கள் தம் பண்டைய அறவொழுக்கங்களைப் பேணிப் பாதுகாத்து அவற்றின் வழியே நல் வாழ்க்கையை நடாத்த அற இலக்கியங்களைப் படைத்து சமுதாய வாழ்வியலைச் செம்மைபெறச் செய்திருக்கின்றனர்.

## உசாத்துணை நூல்கள்


1. இராமாணிக்கனார். மா., 2009. தமிழக வரலாறும் ஆட்சியும். சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
2. கலைவாணி. இ. 2010. இந்து மரபில் வர்ண தர்மமும் சைவசித்தாந்த ஒழுக்கவியலும். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3. .................. 2019. இந்துக்களின் அற ஒழுக்கவியற் செல்நெறி. கொழும்பு: ஆலயம் வெளியீட்டகம்.
4. சந்திரசேகரன். இரா., 2007. நாலடியாரில் அறவாழ்வு. சென்னை: சீதை பதிப்பகம்.
5. சுப்பிரமணியபிள்ளை. கா., 2009. இலக்கிய வரலாறு. சென்னை: பூம்பகார் பதிப்பகம்.
6. சுந்தரசண்முகனார்., 1970. நாலடியார் நயவுரை. சென்னை: புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்.
7. செல்வநாயகம். வி., 2005. தமிழ் இலக்கிய வரலாறு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
8. நாராயண வேலுப்பிள்ளை. எம்., 2001. சங்க இலக்கியம் வழங்கும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். சென்னை: நர்மதா வெளியீடு.
9. பழனிவேல்பிள்ளை. பெ., 1947. நாலடி இன்பம். சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
10. புலியூர்க்கேசிகன்., 2010. நாலடியார் தெளிவுரை. சென்னை: சாரதா பதிப்பகம்.
11. ...................... 2014. திருக்குறள் பரிமேலழகர் உரை. சென்னை: பூம்பகார் பதிப்பகம்.
12. ராஜ் கௌதமனின்., 2008. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும். சென்னை: நியு செஞ்சரி புக்ஹவுஸ்.
13. வில்லியம் லில்லி. 1964. அறவியல் ஓர் அறிமுகம். தமிழ்நாடு: தமிழ் புத்தகாலயம்.
14. வேலுப்பிள்ளை. ஆ., 2011. தமிழர் சமய வரலாறு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
15. .................. 1985. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும். சென்னை: தமிழ்ப் புத்தகசாலை.
16. ஸ்ரீசந்திரன். ஜெ., 1991. நாலடியார் மூலமும் தெளிவுரையும். சென்னை: வர்த்தமானார் பதிப்பகம்.
17. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். 2011. அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும். கொழும்பு.